DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No.56/2025**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | காளைச்சாமி (சார்பு ஆய்வாளர்) (PW.9) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of June 2026

( 1வது எதிரி ஆஜர். 2 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு– 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )

**முதல் விசாரணை –**

நான் கட்டனுார் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி 31.03.2024ம் தேதியன்று ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 07.11.2023ம் தேதி கட்டனுார் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது கட்டனுார் காவல் நிலைய குற்ற எண். 10/2023 இதச பிரிவு 147, 294(பி), 323 மற்றும் 4 of TNPHW Actன் படியான வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு வழக்கில் காயம்பட்ட ஜெயா, லட்சுமி ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை மருத்துவர் நிஷாந்த் என்பவரை விசாரித்து காயச்சான்றுகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது

விசாரணை முடித்து மேல் விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்தேன்.

**எ.த.கு.வி –**

அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை மருத்துவர் எனதுவிசாரணையில் காயம்பட்ட நபர்கள் வேறு எங்கும் சிகிச்சைக்கு செல்லவில்லை என்றும் நேரடியாக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு வந்ததாக தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். அசா3, அசா4 காயச்சான்றுகளில் திருச்சுழி அரசு மருத்துவமனையில் AR No.950, 951 ன்படி பார்வையிட குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் கோப்புகளிலும், நீதிமன்ற கோப்புகளிலும் திருச்சுழி அரசு மருத்துவமனையில் உள்ள விபத்து பதிவேடு இல்லை என்றால் சரிதான். மேற்படி விபத்து பதிவேட்டை பதிவு செய்த மருத்துவரும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி முரண்பாடுகளில் இருந்து நான் மருத்துவரை முறையாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

**இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.